பக்கங்கள்:-17


# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | வைகாசி 30 | வெள்ளிக்கிழமை | 13.06.2025 | அதிர்வு 313

### தையிட்டி விகாரை அமைந்துள்ள

## காணி உரிமையாளர்களுக்கு நட்டஈடு அல்லது மாற்றுக் காணி

யாழ். தையிட்டி விகாரை அமைந்துள்ள தனியார் காணிகளுக்கு நட்டஈடு அல்லது மாற்றுக் காணிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்று கடற்றொழில் அமைச்சர் 06






# தமிழரசிடம் இருந்து விக்கியை பாதுகாக்க இனி யாரும் இல்லை

## இப்படிக் கூறுகின்றார் சித்தார்த்தன்

வடக்கு மாகாண முதலமைச்சராகப் பதவி வகித்த சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக இலங்கைத் தமிழரசுக் கட்சியினரால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்குக் கடும் எதிர்ப்பைவெளிப்படுத்திதாமேஅவரைப் பாதுகாத்ததாகச் சுட்டிக்காட்டியுள்ள ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், எதிர்வரும் காலத்தில் விக்னேஸ்வரனுக்கு எதிராக தமிழரசுக் கட்சி முன்னெடுக்கக்கூடிய நடவடிக்கைகளிலிருந்து அவரைப் பாதுகாப்பதற்கு யாரும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். 06

# முற்போக்குக் கூட்டணி உறுப்பினர்களின் ஆதரவோடு ஹல்முல்லயில் ஆட்சியமைத்தது தேசிய மக்கள் சக்தி

## 2 உறுப்பினர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் மனோ



பதுளை, ஹல்துமுல்ல பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்துள்ளது. தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் தெரிவான இரண்டு உறுப்பினர்கள் என்.பி.பிக்கு ஆதரவளித்தனர்.

ஹல்துமுல்ல பிரதேச சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 9 இடங்களைப் பெற்றிருந்தது.

ஐக்கிய மக்கள் சக்திக்கு 6 இடங்களும், தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு இரண்டு இடங்களும், ஸ்ரீலங்கா பொதுஜன ஐக்கிய முன்னணிக்குஇரண்டுஇடங்களும்,ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஒரு இடமும், ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஒரு இடமும் கிடைக்கப் பெற்றன.

இந்நிலையிலேயே வாக்கெடுப்பின்போது தமிழ் முற்போக்குக் கூட்டணியின்ஹ உறுப்பினர்கள் இருவரும் தேசிய 06




வடக்கு – கிழக்கு ஜனநாயக அரசியலின் செல்நெறிப் போக்கை பொறுத்தவரை இன்றைய தினம் தீர்க்கமான ஒரு நாளாக இருக்கும்.

வடக்கில் – குறிப்பாக யாழ்ப்பாண மாநகர சபை மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றின் – மேயர் மற்றும் நகர பிதாவை தெரிவு செய்வதற்கான இன்றைய தேர்தலின் போக்கு எதிர்வரும் காலங்களில் தமிழர் அரசியலின் திசையை தீர்மானிக்கும் விடயமாக அமையக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். மாநகர சபையைப் பொறுத்தவரை மும்முனைப் போட்டி இருப்பதாக கூறப்பட்டாலும், அதற்கு அப்பால் ஏதேனும் இரு தரப்புகள் சேர்ந்து மூன்றாம் தரப்பை வீழ்த்துவதற்கான சதி திட்ட நகர்வுகள் கட்டவிழ்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என சில தரப்புகள் கூறுகின்றன.

அப்படி இருதரப்புகள் சேர்ந்து கபடமாக மூன்றாம் தரப்பை வீழ்த்துவதற்கு இணங்கினால், முதல் காரியமாக இன்றைய மேயர் தேர்வை இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடத்த வேண்டும் 06

# திராணி இருந்தால் ஜனாவை பதவியில் இருந்து நீக்குங்கள்!

## கஜேந்திரகுமார், செல்வம் இருவருக்கும் சாணக்கியன் சவால்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனின் பிரதேசமான களுவாஞ்சிக்குடியை உள்ளடக்கிய மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்கான தவிசாளர் தெரிவில் கடும் போட்டிக்கு மத்தியில் தமிழரசுக் கட்சி தலைமைப் பதவியைக் கைப்பற்றியது.

இதற்காக நடத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில் தமிழரசுக் கட்சி வேட்பாளர் மேகசுந்தரம் வினோராஜ் பத்து வாக்குகளையும், தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் கணேசநாதன் 9 வாக்குகளையும் பெற்றதனால் தமிழரசுக் கட்சி சபையைக் கைப்பற்றியது.

குறித்த பிரதேச சபையினுடைய சபை அமர்வின் பின்னர் தனது அலுவலகத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஊடகங்களுக்கு கருத்துக்களை தெரிவித்திருந்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

மட்டக்களப்பில் மண்முனை தென் எருவில் பிரதேச சபையினுடைய தவிசாளர் தெரிவில் நடைபெற்ற ஒரு சம்பவத்தினை நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இந்த சபையினை பொறுத்தளவில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி எட்டு ஆசனங்களையும், இரு சுயேச்சைக் குழுக்கள் தலா ஒவ்வொரு ஆசனத்தையும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி இரண்டு ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி ஆறு ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி ஓர் ஆசனத்தையும், அத்துடன் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஒரு ஆசனத்தையும் என மொத்தமாக 20 ஆசனங்களையும் பங்கிட்டிருந்தன.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு சுயேடச்சைக் குழு ஒன்றினுடைய ஆதரவும், ஐக்கிய மக்கள் சக்தியினுடைய ஓர் உறுப்பினரின் ஆதரவுமாக மொத்தமாக 10 ஆசனங்கள் இருந்தன. எதிராக பத்து ஆசனங்கள் இருந்தன. இதில் நான் முன்னர் குறிப்பிட்ட இருபதாவது ஆசனம்தான் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக்கு பட்டியலில் கிடைத்த ஓர் ஆசனம். அந்த ஆசனத்தினை ரெலோ கட்சியினுடைய செயலாளர் நாயகமான ஜனா என அழைக்கப்படும் கோவிந்தன் கருணாகரம் அவரது சொந்த மருமகனுக்கு வழங்கியிருந்தார். அண்மையிலே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட பலர் இணைந்து உருவாக்கிய பேரவையில் ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனிற்குப் பதிலாக அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர் தான் இந்த ஜனா என அழைக்கப்படும் கோவிந்தன் கருணாகரம்.

மண்முனை தென் எருவில் பிர





தேச சபையினுடைய தவிசாளர் தெரிவிற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினராகிய நாம் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் சங்கு சின்னத்தில் போட்டியிட்டு பட்டியலில் தெரிவாகி வந்தவரின் ஆதரவைக் கோரியிருந்தோம். ரொலோவினுடைய ஆதரவினை தருவதற்கு அவர் பல நிபந்தனைகளை விதித்திருந்தார். அதேசமயம் இந்தத் தேர்தலில் தமிழரசுக் கட்சியை ஆதரிக்கும்படி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பல தலைவர்களுடனும் தமிழரசுக் கட்சியின் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், நான் உட்படப் பலரும் பேசிய போதிலும், ரெலோவின் செல்வம் அடைக்கலநாதன், வினோதராதலிங்கம், சுரேன் குருசாமி, பிரசன்னா இந்திரகுமார் போன்றோர் தமிழரசை ஆதரிக்க அல்லது வாக்கெடுப்பில் பங்குபற்றாமல் இருக்க இணங்கிய போதிலும், ரெலோவின் செயலாளர் நாயகமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தமிழரசை எதிர்த்து தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவாக தனது ஒரே உறுப்பினரை வாக்களிக்கச் செய்வதில் உறுதியாக இருந்தார்.

தேசிய மக்கள் சக்தி சார்பாகப் பரிந்துரை செய்த தவிசாளருக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி இன்று மட்டக்களப்பில் செயற்பட்டுள்ளது. புதிதாக முளைத்த பேரவைகள் வடக்கு, கிழக்கிலே தென்னிலங்கை பேரினவாத கட்சிகள் ஆட்சி அமைக்க இடம் கொடுக்கக்கூடாது என்று பல வீரவசனங்களை பேசுகின்றனர். ஆனால் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி (TMVP) மற்றும் தேசிய மக்கள் சக்தி (NPP) ஆகிய கட்சிகள் இணைந்து பரிந்துரை செய்த தவிசாளர் வேட்பாளருக்குத் தங்களது ஆதரவினை இந்த ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியினர் வழங்கியிருக்கின்றனர். இந்த ஆதரவினை வழங்கிய தீர்மானம் ஜனநாய தமிழ் தேசிய கூட்டணியின் முடிவில்லை என்றால் – ரெலோவினுடைய முடிவில்லை என்றால் – ரெலோவினுடைய தலைவர் செல்வம் அடைக்கலநாதன் அவர்கள் கோவிந்தன் கருணாகரன் அவர்களை செயலாளர் நாயகத்தின் பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்பதுடன் "சங்கு" கட்சியில் இருந்தும் நீக்க வேண்டும். இல்லையென்று சொன்னால் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மற்றும் தேசிய மக்கள் சக்தி கட்சிகளை வெல்ல வைப்பதற்காகவே தான் நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டுள்ளீர்கள் என்று அது அர்த்தப்படும்.

வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு முன்பு வரையும் ஜனா அவர்களுடன் தொடர்பினை மேற்கொண்டிருந்தோம். ஆனால் அதற்கு பதிலாக தனது சம்பந்தப்பட்ட உறுப்பினருடன் தாம் தொடர்பு கொள்ள முடியாதுள்ளது என்ற ஒரு பதிலினை வழங்கியிருந்தார். ஆனால் வாக்கெடுப்பின் போது இரகசிய வாக்கெடுப்பா? திறந்த வாக்கெடுப்பா என்ற தேர்விலே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியோருடன் இணைந்து சங்கு சின்ன உறுப்பினர் வாக்களிப்பில் ஈடுபட்டிருந்தார். மட்டக்களப்பில் திசைகாட்டியுடனும், படகுடனும் இணைந்து ஆட்சியமைப்பதற்கு சங்கு சின்னம் ஈடுபட்டுள்ளது என்பதற்கு இதைவிட சாட்சியங்கள் வேறேதுமில்லை. ஈ.பி.டி.பி.யுடன் எமது கட்சியினை சேர்ந்தவர்கள் யாராவது பேசியிருந்தால் அவர்களை நீக்கப்படுவார்கள் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அண்மையில் தெரிவித்திருந்தார். ஆனால் சித்தார்த்தன் அவர்கள் ஈ.பி.டி.பி.யுடன் – அக்கட்சியின் தலைமையுடன் – பேசியதாக டக்ளஸ் தேவானந்தாவே ஊடகங்களில் தெரிவித்திருந்தார். தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஆட்சியமைக்கும் இந்த கேவலமான செயற்பாட்டினை முன்னிட்டு திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முடிந்தால் தங்களது பேரவையில் இருந்து ஜனாவை நீக்கிக்காட்டுங்கள். ரெலோ கட்சியின் தலைமையின் வழிகாட்டுதலை மீறி இந்தச் செயற்பாடுகளை மேற்கொண்ட அக்கட்சியின் செயலாளர் நாயகத்தினை பதவியில் இருந்து நீக்குங்கள். அவ்வாறில்லை என்றால் உங்களுடைய கட்சி தேசிய மக்கள் சக்திக்கு சார்பானதாகவே மக்கள் முன்னிலையில் உங்களை காட்ட வேண்டியாதாகி விடும். அதுமட்டுமில்லை, மட்டக்களப்பு மாநகர சபையிலும் ஜனாவினுடைய உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியுடனும் இணைந்து ஆட்சியமைப்பதற்கு வழிகோலினார்கள் என்பதையும் பகிரங்கமாவே சுட்டிக்காட்டுக்கின்றேன். – எனத் தெரிவித்தார்.

# யாழ் மேயர் தெரிவில் இன்று முதல் சுற்றில் மூவர் போட்டி







யாழ் மாநகர சபையின் புதிய முதல்வரைத் தெரிவு செய்வதற்கான போட்டியில் மூன்று கட்சிகளில் இருந்து வேட்பாளர்கள் களமிறங்கவுள்ளனர்.

யாழ் மாநகர சபையின் முதல்வரை தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்றையதினம் யாழ் மாநகர சபை சபா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

45 உறுப்பினர்களை கொண்ட யாழ் மாநகர சபையில் 23 ஆசனங்களை வைத்திருக்கும் கட்சியே ஆட்சியை அமைக்க முடியும். எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மையை கொண்டிருக்காத நிலையில் கட்சிகள் கூட்டுக்களை அமைத்து ஆட்சியை அமைக்கவுள்ளது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி 13 ஆசனங்களையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் 12 ஆசனங்களையும் தேசிய மக்கள் சக்தி 10 ஆசனங்களையும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆகியன தலா 4 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன தலா ஓர் ஆசனத்தையும் கைப்பற்றின.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் யாழ் மாநகர சபையின் முதல்வர் பதவிக் காகப் போட்டியிடவுள்ளன.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் முதல்வர் பதவிக்கு விவேகானந்தராஜா மதிவதனியின் பெயரையும் பிரதி முதல்வர் பதவிக்கு இம்மானுவேல் தயாளனின் பெயரையும் பரிந்துரைக்க கட்சி தீர்மானித்துள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முதல்வர் வேட்பாளருக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன ஆதரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் முதல்வர் வேட்பாளரை ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆதரிக்கும். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பில் முதல்வர் பதவிக்கு கனகையா ஸ்ரீகிருஷ்ணாவும், பிரதி முதல்வர் பதவிக்கு துரைராஜா ஈசனும் பரிந்துரைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் முதல்வர் பதவிக்கு சுந்தரமூர்த்தி கபிலன் போட்டியிடுவார் என அக்கட்சியின் யாழ் மாவட்ட நிறைவேற்றுக்குழு உறுப்பினரும் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

# சிறுவர்களை இனிமேல் பணிக்கமர்த்தத் தடை அமைச்சர் சரோஜா சாவித்திரி போல் தெரிவிப்பு

(பொகவந்தலாவ நிருபர் எஸ்.சதீஸ்)

நாட்டில் சிறுவர்களை பணிக்கமர்த்துவது தடைசெய்யப்பட்டுள்ளதாக மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் சாவித்திரி சரோஜா போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் இதன் போது மேலும் கருத்துரைக்கையில் –

வீதிகளில் யாசகம் பெரும் , வர்த்தகம் செய்யும் மற்றும் பிற பாதுகாப்பற்ற வேலைவாய்ப்புத் துறைகளில் ஈடுபடுத்தப்படும் சிறுவர்களுக்கு தற்காலிக நன்கொடைகளை வழங்குவதற்குப் பதிலாக, கல்வி மற்றும் சமூகப் பாதுகாப்பு உரிமைகளுக்கான அவர்களின் உரிமைகளை உறுதி செய்வதை எங்கள் அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது.



இந்தச் சேவைகளை மிகவும் தரமான வையாக மாற்றுவதற்கான எதிர்கால திட்டங்கள் தொடர்பில் பெண்கள்மற்றும்சிறுவர்கள்விவகாரஅமைச்சு, தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு ஆணையம், நன்னடத்தை மற்றும் சிறுவர்கள் பாதுகாப்பு சேவைகள் மற்றும் ஊடகங்கள் இணைந்து செயல்பட்டன. மேலும் இதன் நோக்கம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.

வீதிகளில் சிறுவர்களை ஈடுபடுத்துதல், கைப்பொருள் விற்பனை செய்தல் மற்றும் வீட்டு வேலைக்கு அமர்த்துதல் ஆகியவற்றுக்கு எமது அரசாங்கத்தின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ளப் படும். – என்றார்

பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் டாக்டர் நாமல் சுதர்சன, பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சின் செயலாளர் கே.டி.ஆர். திருமதி. ஓல்கா, தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் திருமதி. பிரீத்தி இனோகா ரணசிங்க, நன்னடத்தை மற்றும் சிறுவர்கள் பாதுகாப்பு சேவைகள் துறையின் மூத்த நன்னடத்தை அதிகாரி திருமதி. நிர்மலி பெரேரா மற்றும் தொழிலாளர் துறை ஆணையாளர் என்.ஆர்.ரணவக்க ஆகியோர் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# செம்மணிப் புதைகுழி விவகாரம் கைவிடப்படும் விடயமாகவன்றி உண்மை, நீதியை நிலைநாட்டத் தக்கதாக முன்நகர வேண்டும்!

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

செம்மணிப் புதைகுழி விவகாரம் கைவிடப்படும்விடயமாகவன்றி உண்மையையும் நீதியையும் நிலைநாட்டத் தக்கதாக முன்நகரவேண்டும் என யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

செம்மணிப் புதைகுழி அகழ்வாய்வு பணிகள் தொடர்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்ட அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் –

இலங்கை தேசத்தில் இனமுரண்பாடு நிலை தோன்றியபின்னர் சிறுபான்மையின மக்கள் பல வழிகளிலும் பாதிப்புக்களை எதிர்கொண்டனர். அவ்வப்போது திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட இனக் கலவரங்களினால் சிறுபான்மையினத்தவர் – குறிப்பாகத் தமிழர்கள் – ஆயிரக்கணக்கில் அநியாயமாகக் கொல்லப்பட்டமையுடன் பெறுமதிமிக்க சொத்துக்களும் சூறையாடப்பட்டன.

இனமுரண்பாடு என்பது உருமாற்றம் பெற்று ஆயுதப் பிணக்காக மாற்றமுற்ற போது பல்வேறு வழிகளிலும் தமிழ்மக்கள் மீது அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்டன. படுகொலைகள், சந்தேகத்தின் பெயரிலான கைதுகள், காலவரையறையற்ற தடுப்புக்கள், விசாரணையற்று அல்லது விசாரணை முடிவுறுத்தப்படாது திட்டமிட்டு இழுத்தடிப்புச் செய்யப்பட்ட சிறைவாசம், காணாமல் போதல், பலவந்தமாக நாட்டைவிட்டு வெளியேற வற்புறுத்தல் என்றவாறாக அடக்குமுறைகளின் வடிவங்கள் நீண்ட பட்டியலைக் கொண்டன.

தமிழர்கள் மீது பிரயோகிக்கப்பட்ட அடக்குமுறைகளில் அதிகம் கவனம் கொடுக்கப்படும் விடயங்களாக இன்று வரையும் இருப்பவை சட்டத்தின் பிடியினால் இறுக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் தடுத்து வைப்பும், காணாமல் போனவர்கள் குறித்த நிச்சயமற்ற தன்மையுமே. இவற்றுள்ளும் அதிக வலியையும் வேதனையையும் தருபவை காணாமலாக்கபட்டவர்களின் கதைகளே. தமிழர் பிரதேசங்களில் ஆயுதப்போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கென நிலைநிறுத்தப்பட்ட இலங்கை இராணுவத்தினருக்கும் அவர்களோடு இணைந்து செயற்பட்ட துணை இராணுவக் குழுக்களுக்கும் எல்லையற்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன அல்லது மாறாக அவர்கள் அதிகாரங்களை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களின் மனிதாபிமானமற்ற அதிகாரவலுவினால் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட மக்கள் பலரின் துன்பக்கதைகளும் வலிகளும் பேசாப்பொருள்களாக புதையுண்டு போயிருக்கின்றன. இருந்தும் இயற்கை நீதிக்கோட்பாட்டிற்கிணங்க வெளிக்கிளம்பிய மனித குலத்திற்கும் மனிதாபிமானச் சட்டங்களுக்கும் எதிரான சில கதைகள் கவனம் கொடுக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்பட்டன.

இவ்வாறு பகிரங்கப்படுத்தப்பட்ட பல கதைகளும்அவ்வப்போதுகவனம்கொள்ளப்படுவதும் பின்னர் கைவிடப்பட்டு கிடப்பில் போடப்படும் விடயங்களாகவும் மாறியிருக்கின்றன.

இவ்வாறானதொரு விடயப்பரப்பாக செம்மணிப் புதைகுழி விவகாரமும் விளங்குகின்றது.

ஆயினும் தொடர்ந்தும் கைவிடப்படும் விடயமாக இனியும் இது மாறிவிடக்கூடாதுஎனும்அக்கறையையாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினராகிய நாம் வலுவாகப் பதிவுசெய்கின்றோம். இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணக் குடாநாடு இருந்தபோது காணமால் ஆக்கப்பட்ட பலருக்கு இன்றுவரை என்ன நடந்தது என்பது தெரியாத அவல நிலை தொடர்கின்றது. இந்த நிலையே இறுதிப் போரின் போதும் நிகழ்ந்துள்ளது. அவர்களது உறவினர்கள் பல்லாண்டுகளாக தொடர்ச்சியாக போராடி வருகின்றார்கள்.

போருக்குப் பின்னான சூழ்நிலையில் யார் எந்த வலுவான சத்தியும் இயற்கை நீதிக்கு மாறாக நிகழ்ந்த அவலங்களை மறைக்க நினைத்தாலும் அவை ஏதோவொரு விதத்தில் வெளிக்கிளம்பிய வண்ணமேயுள்ளன.

செம்மணிப் புதைகுழி விவகாரமும் இப்போது அவ்வாறு வெளிக்கிளம்பி நீதித்துறையின் கட்டுப்பாட்டில் உரிய வகையில் முன்கொண்டு செல்லப்படுகின்றது. இந்த நிலை வலுவாக்கப்பட வேண்டும் என்பதுடன் புதைகுழிகளின் நீட்சி அறியப்படவும் வேண்டும் என்பதும் மிகவும் அவசியமானது. எந்தவொரு காரணத்தை முன்னிறுத்தியும் புதைகுழி அகழ்வுகள் இடைநிறுத்தப்படக்கூடாது. உரிய நிதியை உரிய காலத்தில் விடுவித்தல், புதைகுழி அகழ்வுப் பிரதேசங்களுக்கு உரிய பொலிஸ் பாதுகாப்பினை வழங்குதல், அகழ்வுப் பணிகளில் ஈடுபடும் தரப்பினர் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்காதிருத்தல் என்பன அவசியமானவையென எமது ஆசிரியர் சங்கம் கருதுகின்றது.

இவ்விடயங்களில் எந்தவித நெகிழ்வுமற்று செயற்பட வேண்டிய பொறுப்பு ஆட்சியிலுள்ள அரசாங்கத்துக்குரியது. இவ்விடயத்தில் மனிதஉரிமைகள் மீது அக்கறை கொண்ட உள்ளூர் மற்றும் சர்வதேச தரப்புக்களின் கவனத்தை எமது சங்கம் ஈர்க்கின்றது. புதைகுழி அகழ்வுப் பணிகளுக்கான நிதியுதவிகளை வழங்குதல், சர்வதேச கண்காணிப்பு பொறிமுறைகளை உருவாக்குதல் என்பன குறித்து அதிக அக்கறையெடுக்குமாறு தொடர்புடைய தரப்புக்களுக்கு நாம் அழுத்தம் கொடுக்கின்றோம். போரைக் காரணமாக வைத்து அப்பாவி மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் வெளிக்கொணரப்பட வேண்டும். பிஞ்சுக் குழந்தைகள் மற்றும் பெண்கள் உட்பட ஈவிரக்கமற்று கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட சொந்தங்களுக்கு நீதிகிடைக்க வேண்டும். அவர்களின் விபரங்கள் விஞ்ஞானரீதியிலான பிறப்புரிமையியல் பரிசோதனைகளின் வாயிலாக வெளிப்படுத்தப்படவேண்டும். இதன் மூலம் இலங்கை நீதிக் கட்டமைப்பின் மீது கொண்டுள்ள நம்பிக்கை வெளிப்படுத்தப்பட வேண்டும். அரசியல் நகர்வுகளை மேற்கொள்ள துணைசெய்யும் காரணிகளாக அல்லது நிகழ்வுகளாக இவை கருதப்பட்டு அவ்வப்போது கையில் எடுக்கப்படுவதும் பின்னர் கைவிடப்படுவதுமான போக்குகள் முடிவுறுத்தப்படவேண்டும். குற்றம் இழைத்தவர்களுக்கு தண்டனை வழங்குவதற்கு அப்பால் குற்றம் ஒன்று நிகழ்ந்திருக்கின்றது என்பது இயற்கையின் துணையால் வெளிக்கிளம்பும் போது அதனை முன்கொண்டு செல்லவேண்டியது பொறுப்புடையவர்களின் தார்மீகக் கடமையாகும். போரின் காரணமாக நிகழ்ந்த அவலங்களுக்கு தீர்வு காணாமல் போர் உருவான மூலக்காரணத்துக்கு தீர்வு காணுவது என்பது சாத்தியமற்றதொன்று. அத்துடன் போரின் விளைவுகளுக்கு நீதி வழங்காத அதிகாரத் தரப்பு போரின் மூலப்பிரச்சனைக்கு தீர்வு தரும் எனும் நம்பிக்கையும் பாதிக்கப்பட்ட தரப்பினரிடம் உருவாகமாட்டாது என்பதும் யதார்த்தமான உண்மை.

அதுபோன்று பட்டலந்த சித்திரவதை முகாம் விடயத்துக்கு கொடுக்கப்படும் அதே கரிசனை இவ் விடயத்திலும் பிரதிபலிக்கவேண்டும். இதனை உரிய தரப்பினர் விளங்கிக் கொள்ள வேண்டும்.

செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் அர்ப்பணிப்புடன் செயற்படும் தொடர்புடைய நீதித்துறை சார்ந்தவர்கள், சட்டத்தரணிகள், சட்டமருத்துவ அதிகாரிகள், அகழ்வாராய்ச்சி நிபுணர்கள் அனைவருக்கும் எமது சங்கம் நன்றியைப் பகிர்கின்றது. அவர்களது பணிகளுக்கு குறுக்கேவரும் தடைகளை களைந்து இவ் விடயத்தை முன்கொண்டு செல்லுமாறு அரசை நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

புதைகுழி விவகாரங்களை சரியான முறையில் அணுகுவது இலங்கைத் தேசத்தின் முன்னேற்றத்துக்கு அவசியமானது. அவலமாக மரித்த உயிர்களின் ஆத்மாக்கள் அமைதிகொள்ளும் போது தான் நாடு முன்னோக்கிச் செல்ல முடியும். மாறாக அந்த ஆத்மாக்களின் அவலக்கதைகள்தொடர்ந்தும் மூடிமறைக்கப்பட்டால் அவற்றினால் விளையும் பாதிப்புக்கள் நாட்டை மேலும் மோசமானநிலைக்கு இட்டுச் செல்லும். இதனையுணர்ந்து செம்மணிப் புதைகுழி விவகாரம் கைவிடப்படும் விடயமாகவன்றி உண்மையையும் நீதியையும் நிலைநாட்டக்கூடிய வகையில் முன்கொண்டு செல்லப்படும் விடயமாக மாறவேண்டும் என்பதை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினராகிய நாம் வலுவாக பதிவுசெய்கின்றோம் – என்றுள்ளது.







# போரா மாநாட்டுக்குத் தேவையான வசதிகளை வழங்குமாறு அறிவுறுத்தல்

இலங்கையில் நடைபெறவுள்ள உலகளாவிய போரா சமூகத்தினரின் ஆன்மீக மாநாடு மற்றும் கண்காட்சியை வெற்றிகரமாக நடத்துவதற்கு அவசியமான முழுமையான ஆதரவை வழங்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

உலகளாவிய போரா மாநாடு மற்றும் கண்காட்சி தொடர்பாக நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

போரா சமூகத்தின் ஆன்மீக மாநாட்டுடன் இணைந்த வகையில் ஜூன் மாதம் 27ஆம் திகதி முதல் ஜூலை மாதம் 05 ஆம் திகதி வரை போரா சமூகத்தின் ஆன்மீகத் தலைவர் கலாநிதி சையதினா முபத்தல் செய்புதீன் சாஹேப் பங்கேற்புடன் பம்பலப்பிட்டி போரா பள்ளிவாசல், இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தை மையப்படுத்தி, இந்த போரா மாநாடு மற்றும் கண்காட்சி நடைபெறும்.

இந்த கண்காட்சி மற்றும் மாநாட்டிற்காக இந்தியா உட்பட பல நாடுகளிலிருந்து சுமார் 15,000 போரா சமூகத்தினர் நாட்டுக்கு வருகை தர உள்ளனர்.

அவர்களுக்கான விமான நிலைய வசதிகள் உட்பட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்குதல் குறித்து இதன் போது விரிவாக கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.













## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

என்று அந்த இரு தரப்புகளும் கோரும் எனக் கூறப்படுகின்றது.

ஏதாவது இரண்டு தரப்புகள் இன்று மேயர் தெரிவுக்கு முன்னர் அந்தத் தெரிவு இரகசிய வாக்கெடுப்பு மூலம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்த முற்பட்டால் அல்லது அதற்கு ஆதரவாக வாக்களித்தால் அதன் அர்த்தம் அந்த இரண்டு தரப்புகளும் சேர்ந்து மூன்றாம் தரப்பைக் கபடமாக வீழ்த்தத் தயாராகி விட்டன என்பதுதான்.

இன்றைய தேர்தலை இரகசிய வாக்கெடுப்புக்கு கோருவதற்கு எந்தத் தரப்பு அல்லது தரப்புகள் முன் வருகின்றன என்பதில்தான் அவற்றின் நேர்மைத் தனம் மதிப்பீடு செய்யப்படும் என்று உறுதியாக கூறலாம்.

தமிழரசோ அல்லது 'சைக்கிள் – சங்கு' கூட்டோ ஒரு தரப்பை வீழ்த்துவதற்கு மறு தரப்பு திசைகாட்டியுடன் கூட்டுச் சேருமானால், அப்படிக் கூட்டுச் சேரும் இரண்டு தரப்புகளும் தங்களை வெளியில் அடையாளப்படுத்தாமல் இருப்பதற்காக இரகசிய வாக்கெடுப்பைக் கோரும் என்று உறுதியாக நம்பலாம்.

திசைகாட்டியோடு சேர்ந்து இரகசிய வாக்கெடுப்புக்குஎந்தத்தரப்புமுன்வருகின்றது என்பதை வைத்து அந்தத் தரப்பின் நேர்மைத்தனத்தை தமிழ் மக்கள் அளவீடு செய்வார்கள் என்று கணிப்பிட முடியும்.

யாழ் மாநகர சபையைப் பொறுத்த வரை தங்கள் உறுப்பினர்கள் எவரும் இரகசிய வாக்கெடுப்பைக் கோரக் கூடாது, அப்படிக் கோருவது தொடர்பான விடயம் வாக்கெடுப்புக்கு வந்தால் அதனை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் எனத் தங்கள் கட்சியின் யாழ் மாநகர சபை உறுப்பினர்களுக்கு கடுமையான வழிகாட்டல் வழங்கப்பட்டிருக்கின்றது என தமிழரசின் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரனும், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமான டக்ளஸ் தேவானந்தாவும் நேற்றிரவு தெரிவித்தனர்.

சாவகச்சேரி நகர சபையின் நகர பிதாவை தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று பிற்பகல் நடைபெற இருக்கின்றது. அதற்கு முன்னர் அந்த சபையில் ஓர் அங்கத்தவருக்கு எதிராக உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு இன்று காலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது. அதனுடைய முடிவும் இன்று மாலை நகர பிதாவின் தெரிவில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நம்பலாம்.

நேற்று மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்கான தேர்தலில் தமிழரசுக் கட்சி கடும் போட்டிக்கு மத்தியில் வென்றிருக்கின்றது.

இறுதியில் பிரதேச சபை தலைவர் தேர்வு இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடந்ததெனினும், அந்த இரகசிய வாக்கெடுப்புக் கோரிக்கை விடயத்தில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் இரண்டு அங்கத்தவர்களில் ஒருவர் இரகசிய வாக்களிப்புக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தமையால், இரகசிய வாக்கெடுப்பு சாத்தியமாகி, தேசிய மக்கள் சக்திக்கு, சங்கு கூட்டணியின் உறுப்பினர் ஆதரவளித்தார் என்ற உண்மை வெளிப்படாமல் முடங்கிப் போய்விட்டது.

இரகசிய வாக்கெடுப்பு விடயத்தில் தமிழரசுக் கட்சியோடு வாக்களித்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் உறுப்பினரின் நிலைப்பாடுதான் தமிழரசு கட்சிக்கு வெற்றி வாய்ப்பைப் பெற்றுத் தந்தது என்பது கண்கூடு.

வாக்களிப்பு இரகசியமாக நடந்தது என்பதால் ரெலோவின் செயலாளர் நாயகம் அந்தச் சபையில் உறுப்பினராக வந்த அவரது மருமகனுடன் சேர்ந்து செய்த 'திருவிளையாடல்' பெரிதும் பகிரங்கமாகாமல் தப்பி விட்டது.

ஆனால் இந்த நடவடிக்கைகளின் விளைவுகளை வன்னியில் சங்கு கூட்டணி – குறிப்பாக செல்வத்தின் ரெலோ – எதிர்கொண்டேயாக வேண்டி இருக்கும்.

## தமிழரசிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் நல்லூர் பிரதேச சபையில் இணைந்து ஆட்சியமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் நேற்றுமுன் தினம் புதன்கிழமை கைச்சாத்திட்டனர்.

இது பற்றி அன்றைய தினம் கருத்து வெளியிட்ட சி.வி.விக்னேஸ்வரன், "கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது நாம் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தோம். இருப்பினும் தமது சங்கு சின்னத்திலேயே போட்டியிட வேண்டும் என அவர்கள் நிபந்தனைகளை விதித்திருந்தனர். அந்த நிபந்தனைகளுக்கு உடன்பட முடியாது என்பதால் நாம் தனித்துச் செயற்பட்டோம். இந்நிலையில், உள்ளூராட்சி சபைகளில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் இணைந்து பயணிப்பதை விடவும், தமிழரசுக் கட்சியுடன் இணைவது எமக்கு அதிக சந்தோஷத்தை அளிக்கின்றது." – என்று தெரிவித்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இதுபற்றிக் கருத்துரைத்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் ஒன்றான புளொட்டின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், சி.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண முதலமைச்சராகப் பதவி வகித்த காலப் பகுதியில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்ட சம்பவத்தை நினைவு கூர்ந்தார்.

இது தொடர்பில் சித்தார்த்தன் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கு மாகாண முதலமைச்சராகப் பதவி வகித்த சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராகக் கடந்த 2017 ஆம் ஆண்டு ஜ"ன் மாதம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகளால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை ஜ"ன் 14 ஆம் திகதி அப்போதைய வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேவிடம் கையளிக்கப்பட்டது.

அவ்வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த தமிழரசுக் கட்சியினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கூட்டமைப்பில் அங்கம் வகித்த ஏனைய கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி, அந்த நெருக்கடியிலிருந்து சி.வி.விக்னேஸ்வரனைப் பாதுகாத்தன.

இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது அந்த வரலாறை விக்னேஸ்வரன் மறந்துவிட்டார்.

எதிர்வரும் காலத்தில் தமிழரசுக் கட்சியால் விக்னேஸ்வரனுக்கு எதிராக முன்னெடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகளில் இருந்து அவரைப் பாதுகாப்பதற்கு யாரும் இல்லை." – என்றார்.

## காணி உரிமையாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

வலிகாமம் வடக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அதன் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

தையிட்டி விகாரை அமைந்துள்ள காணிகளைத் தவிர்த்து, அதனைச் சூழவுள்ள ஏனைய காணிகளை மாவட்ட செயலரிடம் கையளிக்கப் பணிக்கப்பட்டுள்ளது. மாவட்ட செயலர், பிரதேச செயலர் ஊடாகக் காணி உரிமையாளர்களுக்குக் காணிகளை கையளிப்பார்.

அதேவேளை, தனியார் காணிக்குள் விகாரை அமைக்கப்பட்டிருந்தால் அந்தக் காணி உரிமையாளர்க்ளுக்குக் காணியின் பெறுமதி நட்டஈடாக வழங்குவது அல்லது மாற்றுக் காணியை வழங்குவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.



விகாரைப் பிரச்சினையை நீண்டு செல்ல அனுமதிக்க முடியாது. அதனை ஒரு மாத காலத்துக்குள் முடிக்க முடிவெடுத்துள்ளோம்." – என்றார்.

## முற்போக்குக் கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மக்கள் சக்திக்கு ஆதரவளித்துள்ளனர்.

இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு, கட்சியில் இருந்து நீக்கப் படுவார்கள் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

# கட்டுகஸ்தோட்டை விபத்து: ஓட்டோ சாரதி உயிரிழப்பு!

கண்டி – யாழ்ப்பாணம் ஏ – 9 வீதியில் கட்டுகஸ்தோட்டை நகரத்தில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று கட்டுகஸ்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த சொகுசு பஸ் ஒன்று வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோவுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் ஓட்டோவின் சாரதி படுகாயமடைந்த நிலையில் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பரகொட, அலுதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடையவர் ஆவார்.



இதனையடுத்து 41 வயதுடைய பஸ் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சகல பிரச்சினைகளுக்குத் துரித தீர்வு!

## மீனவர் சங்கப் பிரதிநிதிகளிடம் அமைச்சர் சந்திரசேகர் உறுதி

மீனவர் சமூகத்தினர் எதிர்கொள்ளும் ஏனைய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் துரிதமாகவும், உரிய முறையிலும் தீர்வு காணப்படும் எனக் கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் ராமலிங்கம் சந்திரசேகருக்கும் மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையின் பல பாகங்களான மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் (காரைநகர் மற்றும் வேலணை) மற்றும் புத்தளம் (கற்பிட்டி) ஆகிய மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகள், கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரை அமைச்சகத்தில் சந்தித்து, பல்வேறு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இந்தச் சந்திப்பின்போது, மீனவர் சங்கப் பிரதிநிதிகள், தமிழக மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும், கடல் வளங்களுக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்படுவதாகவும் கவலை தெரிவித்தனர்.

குறிப்பாக, நீதிமன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்டு மயிலிட்டி மீனவத் துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் படகுகளால் தமது கடற்றொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதால், அவற்றைப் பொருத்தமான முறையில் அகற்றித் தருமாறு மீனவத் தலைவர்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

மீனவர் சங்க பிரதிநிதிகளின் கோரிக்கைகளுக்கு பதிலளித்த அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்,

தமிழக மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக கடற்படையுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.இவ்விடயம் குறித்து இந்திய உயர்ஸ்தானிகராலயத்திடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், மீனவர் சமூகத்தினர் எதிர்கொள்ளும் ஏனைய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் துரிதமாகவும், உரிய முறையிலும் தீர்வு காணப்படும் என அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் உறுதியளித்தார்.

மீனவர்களின் நலன் கருதி, கடற்றொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு எப்போதும் மீனவர் சமூகத்தினருடன் இணைந்து செயல்படும் என்றும், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கும் என்றும் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மேலும் வலியுறுத்தினார்.

# சிறைச்சாலைக்கு சென்ற சி.ஐ.டியின் 28 குழுக்கள்




குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் 28 குழுக்கள் நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளுக்கும் அனுப்பப்பட்டன.

ஜனாதிபதி பொது மன்னிப்பை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் குழுக்களால் சிறைச்சாலைகளிலுள்ள ஆவணங்கள் சோதனைக்குட்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.சிறைச்சாலைகளுக்கு சென்ற சி.ஐ.டியின் 28 குழுக்கள் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் 28 குழுக்கள் நாட்டிலுள்ள அனைத்து சிறைச்சாலைகளுக்கும் அனுப்பப்பட்டன.

ஜனாதிபதி பொது மன்னிப்பை முறையற்ற விதத்தில் பயன்படுத்தி கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் குழுக்களால் சிறைச்சாலைகளிலுள்ள ஆவணங்கள் சோதனைக்குட்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பண்டாரவளை மாநகர சபையிலும் மலர்ந்தது தேசிய மக்கள் சக்தி ஆட்சி

## வாக்கெடுப்பில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை




உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆட்சியமைப்பதற்குரிய அறுதிப் பெரும்பான்மை பலத்தைப் பெறாத பண்டாரவளை மாநகர சபையிலும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்துள்ளது.

16 உறுப்பினர்களைக் கொண்ட பண்டாரவளை மாநகர சபைக்கு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு ஆறு இடங்கள் கிடைக்கப் பெற்றன.

ஐக்கிய மக்கள் சக்திக்கு மூன்று இடங்களும், மொட்டுக் கட்சிக்கு ஒரு இடமும் கிடைக்கப் பெற்றது. சுயேச்சைக் குழு 1 ஐந்து இடங்களையும், சுயேச்சைக் குழு 2 ஓர் ஆசனத்தையும் கைப்பற்றின.

ஆட்சியமைப்பதற்குரிய அறுதிப் பெரும்பான்மைப் பலத்தை எந்தவொரு கட்சியும், சுயேச்சைக் குழுவும் பெறவில்லை. சிலவேளை எதிரணிகள் ஒன்றிணைந்தால் ஆட்சி அமைத்திருக்கக்கூடும்.

அப்படி இருந்தும் தேசிய மக்கள் சக்தியே ஆட்சியமைத்துள்ளது. இரண்டு சுயேச்சைக் குழு உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்தனர். ஐக்கிய மக்கள் சக்திக்கு 3 இடங்கள் இருந்தும், வாக்கெடுப்பில் உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை. எனவே, வாக்கெடுப்பில் 13 உறுப்பினர்களே பங்கேற்றிருந்தனர்.

அதேவேளை, தேசிய மக்கள் சக்தி அறுதிப் பெரும்பான்மைப் பலத்தைப் பெறாத சபைகளில் ஒன்றாக இணைந்து ஆட்சியமைப்பதற்கு எதிரணிகள் பேச்சுகளை முன்னெடுத்து வந்தன. எனினும், அந்த முயற்சி இன்னும் கைகூடவில்லை என்பதே இந்த முடிவு வெளிப்படுத்துகின்றது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நிமிர்த்த முடியா நாய் வால்கள்

இலங்கைத் தமிழர்களின் - குறிப்பாக வடக்குத் தமிழர்களின் - உணர்வோடு சம்பந்தப்பட்ட ஒரு முக்கிய விடயம் குறித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்தி இருக்கின்றது.

செம்மணிப் புதைகுழி விவகாரம் கைவிடப்படும் விடயமாகவன்றி, உண்மையையும், நீதியையும் நிலை நாட்டத் தக்கதாக முன்நகர வேண்டும் என அந்தச் சங்கம் கூறியிருக்கின்றது.

வடக்கு இலங்கையை இலங்கை இராணுவம் 1995 - 96 ஆம் ஆண்டுகளில் மீண்டும் கைப்பற்றித் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்த காலங்களில், அங்கு பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் கடத்திக் காணாமலாக்கப்பட்டார்கள். புதிதாக குடா நாட்டை கைப்பற்றிய படைத் தரப்பு, விடுதலை புலிகளுக்கு ஆதரவான தரப்புகள் என்று கருதியோரை, மின் வெளிச்சமே இல்லாத குடாநாட்டில், நள்ளிரவுக் கும்மிருட்டு வேளைகளில் சீருடை இன்றி வாகனங்களில் வந்து, வீடுகளில் இருந்து கொத்துக் கொத்தாக அள்ளிச் செல்வது அச்சமயத்தில் தடுப்பார், கேட்பாரின்றிப் பேரவலமாகத் தொடர்ந்ததுதான்.

அப்படி கடத்தப்பட்டு, காணாமலாக்கப்பட்ட பலநூறு தமிழர்களின் கதி, பரந்த செம்மணித் தரவையில் புதையுண்டு அடங்கிக் கிடப்பதாக வடக்குத் தமிழ் மக்கள் தொடர்ந்து நம்பி வந்தார்கள். அத்தகைய விடயத்தை உறுதிப்படுத்தும் தகவல்களும் அவ்வப்போது வெளிப்பட்டுக் கசிந்தும் வந்தன.

அந்தப் பின்புலத்திலேயே இப்போது செம்மணி சிந்துப்பாத்தி மயான மனித புதைகுழி மர்மம் வெளிப்படத் தொடங்கியுள்ளது.

இலங்கையின் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் குறித்து நீதி நேர்மையான, சர்வதேச நியமங்களுக்கு அமைவான, நீதி விசாரணைகளை நடத்த முடியாது என்று இறுமாப்போடு இருக்கின்றது கொழும்பு அரசு. அதற்கு தற்போதைய மக்கள் சக்தி அரசும் விதி விலக்கல்ல.

தமிழ்ப் போராளிகளைத் தோற்கடித்து, நாட்டுக்கு யுத்தப் பெருவெற்றியைத் தேடித்தந்த முப்படையினருக்கும் பொலிஸாருக்கும் எதிராக குற்ற விசாரணைகளை நடத்துவதற்கு இந்தத் தேசிய மக்கள் சக்தி அரசு உட்பட எந்த பௌத்த - சிங்கள பேரினவாத அரசும் தயார் இல்லை என்பது உள்ளங்கை நெல்லிக் கனி.

இத்தகைய சிங்கள - பௌத்த பேரினவாத மேலாதிக்க வெறிச்சிந்தனை கொண்ட கொழும்பு அரசுகள், செம்மணி புதைகுழி போன்றவற்றை நேர்மையாக அகழ்ந்து, உண்மைகள் வெளியாகி, குற்றம் இழைத்த தரப்பினர் உலகத்தின் முன் அம்பலமாவதற்கு இடம் அளிக்கவே மாட்டா என்பது சந்தேகத்திற்கு இடமில்லாத விவகாரமாகும்.

ஆகையால், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பாக வலியுறுத்தும் விடயம் கடைசி வரையில் நேர்மையாக நடக்கப் போவதில்லை என்பதை இப்போதே - முன்கூட்டியே - உறுதியாகக் கூறிவிட முடியும்.

ஆனால்யாழ்ப்பாணப்பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துக்கு ஒரு விடயத்தை கூற முடியும். பௌத்த - சிங்கள பேரினவாத மேலாண்மை வெறிச் சிந்தனைப் போக்கில் முன்னைய அரசுகளுக்கு சற்றும் 'கரட்' குறையாத இந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை தமிழ் மக்களின் ஆதரவுடனும் அதிகாரத்துக்குக் கொண்டு வரச் செய்வதில் அதிகம் பங்களித்த படித்த மேதாவிகள் (?) உங்கள் ஆசிரியர் சங்கத்தில்தான் கணிசமாக இருக்கின்றார்கள். அவர்களிடம்வேண்டுமானால் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான உங்கள் ஆதங்கத்தை தெரிவித்துப் பாருங்கள். அந்த விடயத்துக்காவது அவர்களைக் காரியமாற்ற இறக்கினால்தான், தாங்களும் சேர்ந்து தமிழினத்தை மண் குதிரையை நம்பி ஆற்றில் இறக்கித் தவிக்க விட்டுள்ளோம் என்ற அனுபவப் புரிந்துணர்வு அவர்களுக்கு வரும்.




# விபத்துக்குள்ளான விமானத்தில் பயணித்தவர்களில் 169 பேர் இந்தியர்கள்; 53 பேர் பிரிட்டன் நாட்டவர்

## ஏர் இந்தியா தகவல்

அகமதாபாத்தில் விபத்துக்குள்ளான விமானத்தில் பயணித்த 242 பேரில், 169 பேர் இந்தியர்கள், 53 பேர் பிரிட்டன் நாட்டவர்கள், 7 பேர் போர்த்துக்கல் நாட்டவர்கள், ஒருவர் கனடாவைச் சேர்ந்தவர் என ஏர் இந்தியா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஏர் இந்தியா வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"அகமதாபாத்திலிருந்து லண்டன் கேட்விக் செல்ல வேண்டிய ஏர் இந்தியா 171 விமானம் புறப்பட்ட பிறகு விபத்தில் சிக்கியதை ஏர் இந்தியா உறுதிப்படுத்துகிறது.

அகமதாபாத்திலிருந்து மதியம் 13.38 மணிக்கு புறப்பட்ட இந்த போயிங் 787-8 விமானத்தில் 242 பயணிகள் மற்றும் பணியாளர்கள் இருந்தனர். இவர்களில் 169 பேர் இந்தியர்கள், 53 பேர் பிரிட்டிஷ் நாட்டவர்கள், ஒருவர் கனடாவைச் சேர்ந்தவர் மற்றும் 7 பேர் போர்த்துக்கல் நாட்டவர்.

காயமடைந்தவர்கள் அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள். மேலும் தகவல்களை வழங்க 1800 5691 444 என்ற பிரத்யேக பயணிகள் ஹாட்லைன் எண்ணை நாங்கள் அமைத்துள்ளோம். இந்த சம்பவம் குறித்து விசாரிக்கும் அதிகாரிகளுக்கு ஏர் இந்தியா முழு ஒத்துழைப்பையும் அளிக்கிறது. ஏர் இந்தியா தனது எக்ஸ் பக்கத்திலும், http://airindia.com என்ற தனது இணையதளத்திலும் வழக்கமான புதுப்பிப்புகள் மூலம் கூடுதல் தகவல்களை வெளியிடும்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து குறித்து ஏர் இந்தியா தலைவர் என் சந்திரசேகரன் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"அகமதாபாத்தில் இருந்து லண்டன் கேட்விக் செல்ல வேண்டிய ஏர் இந்தியா விமானம் 171, ஒரு துயர விபத்தில் சிக்கியதை ஆழ்ந்த துக்கத்துடன் உறுதிப்படுத்துகிறேன். இந்த பேரழிவு தரும் நிகழ்வால் பாதிக்கப்பட்ட அனைவரின் குடும்பத்தினர் மற்றும் அன்புக்குரியவர்களுடன் எங்கள் எண்ணங்களும் ஆழ்ந்த இரங்கல்களும் உள்ளன.

இந்த நேரத்தில், பாதிக்கப்பட்ட அனைத்து மக்களையும் அவர்களது குடும்பத்தினரையும் ஆதரிப்பதே எங்கள் முதன்மை கவனம். சம்பவ இடத்தில் அவசரகால மீட்புக் குழுக்களுக்கு உதவவும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான அனைத்து ஆதரவையும் பராமரிப்பையும் வழங்கவும் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்கிறோம். மேலும் சரிபார்க்கப்பட்ட தகவல்கள் எங்களுக்குக் கிடைக்கும்போது மேலும் புதுப்பிப்புகள் பகிரப்படும். அவசர மையம் செயல்படுத்தப்பட்டுள்ளது மற்றும் தகவல் தேடும் குடும்பங்களுக்கு ஆதரவு குழு அமைக்கப்பட்டுள்ளது." என தெரிவித்துள்ளார்.

# அஹமதாபாத் விமான விபத்து அதிர்ச்சியளிக்கிறது; ஸ்டாலின்



அஹமதாபாத் விமான விபத்தில், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் குறித்து மிகவும் கவலை கொள்கிறேன் என்று முதல்வர் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக முதல்வர் தனது சமூகவலைதளப் பக்கத்தில்,

"242 பயணிகளுடன் ஏர் இந்தியா ஏ.ஐ 171 விமானம் அஹமதாபாத்தில் கோரமாக விபத்துக்குள்ளானது அறிந்து மிகவும் அதிர்ச்சியடைந்தேன்.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் குறித்து மிகவும் கவலை கொள்கிறேன். சாத்தியமுள்ள அனைத்து வழிகளிலும் மீட்பு, நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என நம்புகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# அஹமதாபாத் விமான விபத்து; 200 இற்கும் மேற்பட்டோர் பலி



இந்தியாவின் அஹமதாபாத் விமான நிலையத்திற்கு அருகில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற விமான விபத்தில் உயிரிழந்த 202 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

விமானத்தில் 12 பணியாளர்கள் உட்பட 242 பேர் பயணித்திருந்தனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று பிற்பகல் 1.38 அளவில் அஹமதாபாத் விமான நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த எயார் இன்டியா ஏ.ஐ .171 விமானமே விபத்திற்குள்ளானது.

விமானம் பயணத்தை ஆரம்பித்து சில நிமிடங்களில் தீப்பிடித்து வெடித்த காணொலிகள் சமூக வலைதளங்களில் வெளியாகியுள்ளன.

அஹமதாபாத்திலிருந்து லண்டன் கெட்விக் விமான நிலையம் நோக்கி புறப்பட்ட இந்த விமானம் 625 அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்த போது வீழ்ந்து நொருங்கியது.

விமான நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த இந்த விமானத்தினால் வான் நோக்கி உயரப் பறக்க முடியவில்லை.

சில நிமிடங்களில் விமானியினால் எச்சரிக்கை தகவல் கட்டுப்பாட்டு அறைக்கு விடுக்கப்பட்ட போதிலும் கட்டுப்பாட்டு அறையினால் வழங்கப்பட்ட பதிலுக்கு விமானியினால் எந்தவொரு பதிலும் வழங்கப்படவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

போயிங் 787 ட்ரீம்லைனர் விமானத்தின் முன்பகுதி அஹமதாபாத் பி.ஜே. மருத்துவக் கல்லூரியின் மருத்துவ மாணவர்கள் விடுதியின் கூரையின் மீது வீழ்ந்துள்ளது.

அகமதாபாத்தின் மேகானி நகரில் உள்ள பி.ஜே. மருத்துவக் கல்லூரி விடுதி கட்டடத்தின் மீது விமானம் மோதியதில் கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது. 5 மருத்துவ மாணவர்கள் உயிரிழந்துள்ளனர் என்றும், பலர் காயமடைந்துள்ளனர் எனவும் முதற்கட்ட தகவல்கள் கூறுகின்றன. இதில் நான்கு பேர் இளங்கலை மாணவர்கள் மற்றும் ஒருவர் முதுகலை மாணவர் என்றும் கூறப்படுகிறது.

மாணவர்கள் உணவு சாப்பிடும் நேரத்தில் விடுதி மீது விமானம் விழுந்துள்ளதாக தெரிகிறது. உணவுடன் கூடிய தட்டுகள் மற்றும் தண்ணீர் கோப்பைகள் மேசையில் மீது இருப்பது தொடர்பான புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வேகமாக பகிரப்பட்டு வருகிறது. இந்தச் சம்பவம், பல கனவுகளை சுமந்து திரிந்த, அம்மாணவர்களின் துயர நிலையை எடுத்துரைக்கிறது.

விபத்துக்குள்ளான இந்த விமானம் டாட்டா குழுமத்திற்கு சொந்தமானதாகும்.

விமான நிறுவனத்தின் தலைவர் என் சந்திரசேகரன் கவலை வெளியிட்டுள்ளார்.

இந்த விமான விபத்தில் குஜராத்தின் முன்னாள் முதல்வர் விஜய் ரூபானி உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

விமான விபத்தில் உயிரிழந்த 05 மருத்துவ மாணவர்கள் உட்பட 202 பேரின் சடலங்கள் கண்டுடெடுக்கப்பட்டுள்ளன.

இந்த விமானத்தில் பயணித்த பயணி ஒருவர் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்துள்ளார். பயணி ஒருவர் உயிர் பிழைத்ததை அகமதாபாத் பொலிஸ் கமிஷனர் ஜி.எஸ்.மாலிக் உறுதி செய்துள்ளார்.

“11 ஏ இருக்கையில் பயணித்த பயணி ஒருவரை போலீஸார் உயிரோடு இருப்பதை அடையாளம் கண்டனர். இறந்தவர்களின் எண்ணிக்கை குறித்து இப்போது எதுவும் கூற முடியாது. குடியிருப்பு பகுதியில் விமானம் விபத்துக்குள்ளானதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்.” என அவர் தெரிவித்தார்.

விபத்து தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுடன் இந்திய பிரதமர் நரேந்திர மோடி கலந்துரையாடியுள்ளதுடன் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தமது இரங்கல்களையும் தெரிவித்துள்ளார்.

தேவையான அனைத்து மீட்பு பணிகளையும் உடனடியாக முன்னெடுக்குமாறும் பிரதமர் மோடி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

விமான விபத்தில் காயமடைந்தவர்களை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் விமானத்தில் பயணித்தவர்களின் குடும்பத்தினருக்கு தேவையான தகவல்களை வழங்குவதற்கும் அதிகாரிகள் செயற்பட்டு வருகின்றனர் என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே அஹமதாபாத் விமான நிலையத்தின் அனைத்து சேவைகளும் மறுஅறிவித்தல் வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

குஜராத்தின் அஹமதாபாத்திற்கு வடக்கே 9 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஹன்சோலில் இருக்கும் பெரிய சர்வதேச விமான நிலையமான சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச விமான நிலையம் இந்தியாவின் 7ஆவது விமான நிலையமாக தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

நாளாந்தம் சுமார் 245 விமானங்கள் இங்கு வருகைதருவதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

உலகளாவிய ரீதியில் 80 இற்கும் மேற்பட்ட இடங்களுக்கு இங்கிருந்து விமானங்கள் இயக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




# தென்னாபிரிக்காவில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 49 பேர் பலி

தென்னாப்பிரிக்காவின் கேப் மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி 49 பேர் உயிரிழந்துள்ளனர்.

பலத்த மழை காரணமாக, தென்னாபிரிக்காவில் போக்குவரத்து மற்றும் மின்சாரம் என்பன பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, பாடசாலை பஸ் ஒன்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதில் 8 பேர் உயிரிழந்தனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





# கோல்ட் கார்ட் நடைமுறையில்: டொனால்ட் ட்ரம்ப் அறிவிப்பு

அமெரிக்காவின் கோல்ட் கார்ட் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் மூலம் அமெரிக்கக் குடியுரிமையைப் பெற முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதன் பின்னர், கோல்ட் கார்ட் எனும் திட்டத்தை டொனால்ட் ட்ரம்ப் அறிவித்தார்.

அதாவது 5 மில்லியன் அமெரிக்க டொலரை செலுத்தும் வெளிநாட்டவர்கள் இந்த கோல்ட் கார்டை பெறலாம்.

இதன்மூலம், அவர்கள் அமெரிக்கக் குடியுரிமையைப் பெற முடியும் என்று கூறப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கோல்ட் கார்ட் பெறும் திட்டம் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இது கிரீன் கார்டை போன்றது எனவும் மிகவும் பயனுள்ளது என்றும் அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# மஸ்க்கின் மன்னிப்பை ஏற்றுக்கொண்டார் ட்ரம்ப்

எலான் மஸ்க்கின் மன்னிப்பை டொனால்ட் ட்ரம்ப் ஏற்றுக்கொண்டுள்ளார் என வெள்ளை மாளிகை தகவல்கள் தெரிவிக்கின்றன.

மஸ்க் – ட்ரம்ப் இடையே கடந்த சில நாள்களாகக் கருத்து மோதல் நிலவி வந்த நிலையில், நேற்று முன்தினம் மஸ்க், ட்ரம்பிடம் மன்னிப்பு கோரியிருந்தார்.

இந்த மன்னிப்பை ட்ரம்ப் ஏற்றுக்கொண்டுள்ளார் என வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





# 400 போதை மாத்திரைகளுடன் சாவகச்சேரியில் இருவர் கைது!

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை சோலையம்மன் கோவில் பகுதியை அண்மித்து 400 போதை மாத்திரைகளுடன் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவருடன் மேலும் ஒரு சந்தேக நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத் தலைமைப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்னவின் வழிகாட்டுதலின் கீழ் பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயரூபன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த 22வயதான நபரும், சந்தேகத்தின் அடிப்படையில் 19வயதான நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி இரு சந்தேக நபர்களிடமும் மேற்கொள்ளப்பட்ட மருத்துவ பரிசோதனையில் இருவரும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது. பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சில தினங்களுக்கு முன்பாக 15 வயதான மாணவர்கள் மூவர் போதைப் பொருள் பாவித்திருந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# இந்தியத் துணைத் தூதரக ஏற்பாட்டில் இன்று யாழ். நகரில் இரத்த தான முகாம்

நாளை வரும் சர்வதேச இரத்ததான தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகம் மற்றும் யாழ் போதனா வைத்தியசாலை இணைந்து இரத்ததான முகாம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளன. இந்த முகாம் இன்று ஜூன் 13, வெள்ளிக்கிழமை, காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை, யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெறுகின்றது.

“மனிதாபிமானம் நிறைந்த இந்த செயல்முறையில் கலந்து கொள்ள அனைத்துத் தரப்பினரையும் அன்புடன் அழைக்கின்றோம். இதில் பங்கேற்கும் ஒவ்வொரு இரத்ததானக் கொடையாளருக்கும் இலவசமாக ஒரு மரக்கன்று வழங்கப்படும். மேலும் இந்த முகாம், சமூகத்தில் இரத்ததானத்தின் முக்கியத்துவத்தையும், சூழலியலின் பாதுகாப்பையும் ஒருசேர வலியுறுத்தும் நோக்கத்துடன் நடத்தப்படுகிறது.” – என யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகம் ஊடக அறிக்க. ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.



# கடவத்தை - மீரிகம அதிவேக வீதியின் நிர்மாணப்பணிகள் ஓகஸ்ட்டில் ஆரம்பம்

மத்திய அதிவேக வீதியின் கடவத்தை முதல் மீரிகம வரையான இணைப்பு பகுதியின் நிர்மாணப்பணிகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த பணிகள் அரச நிதியில் முன்னெடுக்கப்படவுள்ளன.

வீதி மேம்பாட்டு பணிகளுக்காக சீனாவின் எக்ஸிம் வங்கியுடன் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் இம்மாத இறுதிக்குள் நிறைவடையும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மத்திய அதிவேக வீதியின் நான்காம் கட்டத்தின் கீழ் குருணாகல் தொடக்கம் தம்புள்ளை வரையான பகுதியை நிர்மாணிப்பதற்காக தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள காணி கையகப்படுத்தல் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



# இந்திய சுற்றுலா பயணிகள் 6,014 பேர் நாட்டிற்கு வருகை

கடந்த 5 நாள்களில் 6,014 இந்திய சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

இந்த மாதத்தில் நாட்டிற்கு வருகை தந்த மொத்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் 28.2 வீதமானோர் இந்திய பிரஜைகள் என சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டிற்கு வருகை தந்த இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 210,074ஆக பதிவாகியுள்ளது.

# பாடசாலை அதிபர்களின் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்து



பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் அதிபர்களின் தொழிற்சங்கங்களுக்கு இடையிலான கலந்துரையாடலொன்று கல்வி அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

சம்பள முரண்பாடுகள், பதவி உயர்வு மற்றும் அதிபர்களின் சேவை தொடர்பான பிரச்சினைகள் குறித்து இதன்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த பிரச்சினைகள் தொடர்பில் உடனடியாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, பிரதமர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.



# வவுனியாவில் விளையாட்டு மைதானம் திறந்து வைப்பு

**(கி.வசந்தன்)**

வவுனியா, ஓமந்தையில் சர்வதேச தரத்திலான விளையாட்டுக் கட்டடத் தொகுதியுடன் கூடிய தட,கள விளையாட்டு மைதானம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் சுதத் திலகரத்னவினாக் திறந்து வைக்கப்பட்ட இந்த மைதானம் நீண்ட காலமாக பயன்பாடு இன்றி காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அண்மையில் விளையாட்டு துறை அமைச்சர் இந்தொ பகுதிக்கு விஜயம் செய்து அது தொடர்பில் ஆராய்ந்ததன் அடிப்படையில் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சரால்து நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத் சந்திர, வவுனியா பிரதேச செயலாளர் இ.பிரதாபன், விளையாட்டுத் துறை அபிவிருத்தி பிரிவின் பணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.











# இன்றைய ராசி பலன்கள் - 13.06.2025




இன்று உங்களிடம் விரைந்து முடிவெடுக்கும் திறன் காணப்படும். உங்கள் செயல்களில் வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வம் இருக்கும். இந்தப் போக்கின் காரணமாக நீங்கள் நன்மை அடைவீர்கள்.

உங்கள் தனித்த திறன் உங்கள் செயல்திறனில் வெளிப்படும். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் உங்கள் விருப்பமான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிக்குமிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிப்பதை காண்பீர்கள். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று நீங்கள் சிறப்பான ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று பணிகள் சுமூகமாக நடக்காது. உங்கள் வளர்ச்சியில் தடைகள் காணப்படும். தகுந்த பலன்கள் கிடைக்காது. என்றாலும் கட்டுப்பாட்டுடன் சுமூகமாகச் செயல்களை செய்ய வேண்டும் ஆன்மீகத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

பணியிடத்தில் கடினமான சூழல் காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும்.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பராமரிக்கும் சூழ்நிலை இருக்காது. சகஜமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் காணப்படும்.

மன உளைச்சல் காரணமாக இன்று முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பதன் மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம்.




இன்று அதிகமான செயல்கள் காணப்படாது மனக் குழப்பத்தில் தவறான முடிவுகளை எடுப்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியிடத்தில் வளர்ச்சி குறைந்து காணப்படும். பணிகள் அதிகமாக காணப்படும்.பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் தொடர்பு கொள்வதில் பிரச்சினைகள் ஏற்படும். அது இன்றைய நாளின் இனிமையை பாதிக்கும்.

இன்று பண வரவு காணப்படாது. முடிந்த அளவு சேமிக்க வேண்டும். என்றாலும் நீங்கள் கஷ்டங்களை எதிர்கொள்ள நேரும்.

கண்களில் உபாதை ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று வளர்ச்சி காணப்படும். இன்று நீங்கள் உங்கள் செயல்களில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தின் மூலம் நன்மை பெறுவீர்கள்.

இன்று நீங்கள் உங்கள் திறமைகளை பயன்படுத்தி செயலாற்றுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவீர்கள். உங்களின் இந்த நேரடி அணுகுமுறை காரணமாக நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். இன்று உங்கள் தேவைகளை சமாளிப்பீர்கள். புதிய முதலீட்டுக்கான முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் தன்னம்பிக்கை, தைரியம் மற்றும் உறுதியுடன் செயல்பட வேண்டும். கடினமான சூழ்நிலைகளை நம்பிக்கையுடன் சமாளிக்க வேண்டும். தன்னம்பிக்கையை பராமரிக்க முயற்சி செய்ய வேண்டும்.

இன்று பணிகள் மும்மரமாக காணப்படும். பணிகளை செய்யும் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

சண்டைகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டும். நீங்கள் அமைதியாக இருப்பதன் மூலம் எதிர்மறை விளைவுகளை சமாளிக்கலாம்.

பண இழப்பு காணப்படுகின்றது. தேவையற்ற செலவுகள் காரணமாக பணம் கரையும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் முன்னேற்றத்தில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக திட்டமிட வேண்டும். இசை கேட்டல் மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இன்று நீங்கள் அதிக பொறுப்புகளை சுமக்க நேரும்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க நீங்கள் அமைதியான சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

செலவுகள் அதிகமாக காணப்படும். கணிசமாக பணம் சேமிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

சளி மற்றும் இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று மகிழ்சிகரமான பலன்கள் கிடைக்காது. எனினும் எதிர்பாராத நன்மை கிடைக்க வாய்ப்புள்ளது. முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணிகள் அதிகரித்துக் கொண்டே இருப்பதைக் காண்பீர்கள். இன்று பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டியது அவசியம்.

உங்கள் குழப்பமான எண்ணங்கள் காரணமாக உங்கள் துணையுடன் சில பிரச்சினைகள் ஏற்படும். அது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று பண இழப்பு காணப்படும். தேவையற்ற செலவுகள் உங்கள் கையிருப்பை கரைக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை சற்று குறைந்த அனுகூலமான நாள்.




இன்று நன்மை நடக்கும் நாள். உங்கள் செயல்களில் வெற்றி காண்பீர்கள். விளையாட்டுப் போக்கில் இன்று உங்களுக்கு நன்மை கிடைக்கும்.

பணிகள் அதிகமாக காணப்பட்டலும் நீங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். இன்று உங்கள் பணிகளை நீங்கள் நம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள். உங்கள் குடும்பத்தில் நடக்கும் சுப நிகழ்ச்சியில் இருவரும் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு மகிழ்ச்சிகரமாக இருக்கும். இருக்கும் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்கள் நேர்மறையான போக்கு காரணமாக இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.06.2025




இன்று சிறப்பான நாள். உங்கள் இலட்சியங்கள் நிறைவேறும் நாள். புதிய தொடர்புகள் கிடைக்கும். நட்பு வட்டராம் விரிவடையும்.

பணியில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் செயல் திறன் கண்டு சக பணி யாளர்கள் பொறாமைப்படுவார்கள்பணியில் கிடைக்கும் புதிய வாய்ப்புகள் காரணமாக மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். உங்கள் அன்பை புரிந்து கொண்டு அவரும் பதில் அன்பு செலுத்துவார்.

இன்று பணம் அதிகமாக காணப்படும். உங்கள் சேமிப்பு கூடும் வாய்ப்பும் காணப்படுகின்றது.

நீங்கள் இன்று அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உற்சாகமும் ஆற்றலும் குறை யும்படியான சூழ்நிலை உருவாகும். குறைந்த எதிர்பார்ப்புடன் உங்கள் செயல்களை ஆற்றினால் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாகஇருக்காது. பணிகள் அதிகமாக காணப்படுவதால் நீங்கள் சில சௌகரியங்களை இழக்க நேரும். இது உங்களுக்கு வருத்தத்தை உருவாக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படாமல் நட்புடன் அணுக வேண்டும். இதனால் நல்லுறவை பராமரிக்க முடியும்.

பயணத்தின்போது பணம் இழக்கும் வாய்ப்பு காணப்படுகின்றது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக் காது.இன்றைய நாள் உங்களுக்கு சாதக மாக அமைய உங்கள் புத்திசாலித் தனத்தை பயன்படுத்த வேண்டும்.

கவனமின்மை காரணமாக உங்கள் செயல் திறன் பாதிக்கப்படும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற சக பணியாளர்களின் ஆலோசனைகளைக் கேளுங்கள்.

தேவையற்ற மனக்குழப்பம் காரணமாக அற்ப விஷயங்களில் உங்கள் துணையிடம் குற்றம் கண்டு பிடிப்பீர்கள்.

பண வரவு சுமாராக இருக்கும். பணம் சம்பாதிப்ப தற்கான வாய்ப்பும் குறைவு.

தோல் அரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எண்ணெய் பதார்த்தங்களை உண்பதை தவிர்க்க வேண்டும்.




இன்று மகிழ்ச்சி நிறைந்து காணப் படும். இன்று அதிர்ஷ்டகரமான நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்க உகந்த நாள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதக மாக இருக்கும். உங்களுக்கு கொடுக்கப் பட்ட பணிகளை விரும்பி செய்வீர்கள். உங்கள் திறமை மற்றும் கடின உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் மனநிலை சமநிலையில் இருக்கும். உங்கள் துணையிடம் அமைதியாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். பங்கு வர்த்த கத்தின் மூலம் நல்ல லாபமும் பண வரவும் காணப்படும்.

உங்களிடம் தைரியமும் உறுதியும் நிறைந்து காணப்படும். அதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப் பாக இருக்கும்.

# வவுனியா விபத்தில் மூவருக்குப் படுகாயம்




(கி.வசந்தன்)

வவுனியா – மன்னார் வீதியில் வவுனியா காமினி மகாவித்தியாலயம் முன்பாக நேற்று மாலை இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்துக்குள்ளான தில் மூவர் படுகாயமடைந்தனர் எனல் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா குருமன்காடு பகுதியில் இருந்து கண்டி வீதி நோக்கி சென்ற மோட்டார் சைக்கிள் காமினி மகாவித் தியாலயம் முன்பாக பூங்கா வீதியில் திரும்ப முற்பட்டவேளை அந்த மோட் டார் சைக்கிளின் பின்னால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் உட்பட மூவர் படுகாய மடைந்து வவுனியா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.